1973 டிசம்பர் 4]

நாகப்பட்டினம்-தேமங்கலம் சாலையில் பாலம்

*621 வினா—திரு. அ. இராசமாணிக்கம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-தேமங்கலம் சாலையில் தேவநதியின் குறுக்கே பாலமொன்று கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இல்லை.

திரு. அ. இராசமாணிக்கம்: அந்தப் பகுதியில் இருக்கிற பத்து கிராமங்களை இணைக்கும் அந்தப் பாலம் மிகவும் அவசியம் என்ற அந்தப் பகுதி மக்களின் அக்கோரிக்கையை மறுபரிசிலனை செய்து ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பரிசிலனை செய்யப்பட்டு 1974-75-ம் ஆண்டு அந்தத் திட்டத்தை பார்ட் 2 ஸ்கீமில் சேர்ப்பதற்கு சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

கவிஞர் வேதநாயகம் அவர்களுக்கு நினைவுச்சின்னம்

*622 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகரத்தில், கவிஞர் வேதநாயகம் பெயரில் நகராட்சிப் பூங்காவில் மண்டபம் ஒன்று கட்டிட அடிக்கல் நாட்டப்பட்டிருப்பது உண்மையா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இல்லை.

நாகர்கோயில் பகுதியில் புதிய பேருந்து வழித்தடங்கள்

*623 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாடு அரசுப் போக்குவரத்துத்துறை நாகர்கோயில் ஜாயின்ட் டைரக்டர் அவர்கள் அதிகாரத்துக்குட்பட்ட பகுதிகளில் 1973-74 நிதியாண்டில் புதிதாக பஸ் ரூட்கள் ஏதேனும் தொடங்கப்பட்டிருக்கின்றனவா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) பதின்மூன்று வழித் தடங்கள் புதிதாக துவக்கப் பட்டுள்ளன.

Damages caused to State Transport buses.

*624 Q.—THIRU R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether a number of State Transport buses were damaged by crowds in Madras around 20th July 1973; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) 19—7—1973 ஆம் நாளன்று சென்னை மாநகரின் பல்வேறு பகுதிகளில் ஊர்வலமாகச் சென்ற பல்வேறு தொழிற் சாலைகளைச் சேர்ந்த தொழிலாளர்களால் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த 59 பேருந்துகள் சேதப்படுத்தப்பட்டன.

திரு. ரா. ரா. முனுசாமி : தமிழகத்தில் இப்படி அடிக்கடி போராட்டங்கள், தொழிலாளர் ஊர்வலங்கள், மாணவர்கள் ஊர்வலங்கள், இவை ஏற்படுகிறபோது பொதுச்சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கிறார்கள். அப்படி விளைவிக்கக்கூடியவர்கள் யாரால் தூண்டிவிடப்பட்டு வளர்க்கப்படுகிறார்கள் என்பதை அரசு ஆராய்ந்து அவர்கள்மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்ற கருத்தினைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். பஸ்களைப் பொறுத்த வரையில் அது பொதுமக்கள் வரிப் பணத்திலிருந்து நடைபெறுகிற பொதுச் சொத்தாகும் என்கிற உணர்வு பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிறவர்களானாலும் அல்லது பல்வேறு பணிகளில் ஈடுபட்டிருக்கிறவர்களானாலும், அவர்களுக்கு அந்த உணர்வு வருமானால் இப்பிரச்னைகள் தீரலாம்.

திரு. கே. கந்தசாமி : பொதுவில் வந்த ஆடு புழுத்துச் சாகும் என்று கிராமங்களில் ஒரு பழமொழி உண்டு. இன்று பொது மக்களின் வரிப்பணத்தால் இயங்குகிற பொதுச் சொத்துக்களுக்கு